வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 3455/அ5/2024 நாள். 27.02.2025

பொருள் : தமிழ்நாடு அடிப்படைப் பணி – அலுவலக உதவியாளர்/இரவுக்காவலர் /துப்புரவாளர் பதவியில் இருந்து – பதிவறை எழுத்தராக பதவி உயர்வு வழங்குதல் 01.12.2023 நிலவரப்படி உத்தேச முன்னுரிமை பெயர் பட்டியல் வெளியிடுதல் – சார்பு

பார்வை :
1. அரசாணை நிலை எண் 151 பள்ளிக் கல்வி (எஸ்இ1(1) துறை நாள் 09.09.2022
2. சென்னை – 6 தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்070358/அ5/இ4/2022 நாள் 19.08.2024

--------

பார்வை(2)–இல் காணும் செயல்முறைகளின்படி, அலுவலகங்கள் மற்றும் அரசு உயர் /மேல்நிலைப் பள்ளிகளில் அடிப்படை பணியாளர்களாக பணிபுரிந்து வரும் அலுவலக உதவியாளர்கள், துப்புரவாளர்கள் மற்றும் இரவுக் காவலர்களுக்கு வருவாய் மாவட்டஅளவில் பதிவறை எழுத்தர் பதவி உயர்விற்கான தற்காலிக உத்தேச முன்னுரிமை பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. இணைப்பில் கண்டுள்ள முன்னுரிமை பெயர் பட்டியலில் ஏதேனும் பெயர் விடுபட்டிருந்தாலோ அல்லது புதிதாக சேர்க்கப்பட வேண்டிய பணியாளர் விபரத்தினையும் பணியாளர்கள் திருத்தங்கள் இருந்தாலோ மூன்றாண்டு தற்காலிக உரிமைவிடல் செய்தவர்களின் பெயர் சேர்க்க வேண்டியவர்கள் இருப்பின் அதன் விவரங்களை உடன் உரிய படிவத்தில் மேல்முறையீட்டு விண்ணப்பத்தினை (03.03.2025) திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்குள் இவ்வலுவலக அ5 பிரிவில் நேரில் ஒப்படைக்க வேண்டும்.

மேலும் தகுதியிருந்தும் முன்மொழியாத பணியாளர்கள் பெயர் பிற்காலத்தில் கண்டறியப்பட்டு அப்பணியாளர்கள் தேர்வுநிலைக்கு விண்ணப்பிக்கப்பட்டால் அவ்விண்ணப்பங்களை பரிசீலிக்க இயலாது. இது குறித்து பல்வேறு நிர்வாக இடர்பாடுகள் ஏற்பட்டு வருகிறது. இதுபோன்ற இடர்பாடுகளை தவிர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்டக் கல்வி அலுவலர் இடைநிலை/தொடக்கக்கல்வி/தனியார் பள்ளி மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

இணைப்பு :
முன்னுரிமைப் பட்டியல்

பெறுநர்
1. மாவட்டக் கல்வி அலுவலர்
(இடைநிலை / தொடக்கக்கல்வி / தனியார் பள்ளிகள்)
வேலூர்
2. தலைமை ஆசிரியர்கள்
அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி
வேலூர்